# Hartleyite - Canada/USA

Newsletter of the Hartley College Past Pupils' Association of Canada and USA Volume 10 No.2 October 2006

## தமிழர் தாயகத்தில் மனிதாபிமான நெருக்கடி

தமிழர் தாயகங்களிற் தற்போது நிலவும் மனிதாபிமான நெருக்கடி மிகவும் மோசமான உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. இராணுவத்திரால் விதிக்கப்படும் எரிபொருட் தடையும், எதேச்சாதிகாரமாக விதிக்கப்படும் ஊரடங்குச் சட்டமும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்துப் பாதைகள் மூடப்பட்டதும் ஏற்கனவே போரினாலும் இயற்கை அனர்த்தமான சுனாமியினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் எமது மக்களைச் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கியிருக்கின்றன.

பணம் படைத்தோரே உணவுப்பண்டங்கள் வாங்க முடியாத நிலையில் இருக்கும் போது, அகதி முகாம்களிலும் மர நிழல்களிலும் சீவிக்கும் மக்கள் ஒரு நேரங் கூட உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி மிருகங்களை விடக் கேவலமான நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள்.

இந் நிலையிற் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களாகிய நாம் எமது உடன் பிறப்புக்கள் படும் அவஸ்தைக்கு ஒரு முடிவு கட்டுவதற்கும் அதற்கு முன்பாக உடனடி நிவாரணப் பொருட்களை எமது தமிழ்த் தாய் மண்ணுக்குக்கு அனுப்பித் தமிழ் மக்களின் பட்டினியை உடன் போக்க உதவும்படியும் சர்வதேச சமூகத்தை வேண்ட வேண்டியது அத் தாய் நாட்டிற் பிறந்து வளர்ந்து இலவசக் கல்வி பெற்ற எமது எல்லோரினதும் தலையாய கடமையாகும்.

இந்த இதழில்..


தமிழர் தாயகத்தில் மனிதாபிமான நெருக்கடி ……… 1
பொதுக்கூட்டம் 2006……………………………... 1
கிரிக்கட் போட்டி ............................................... 2
கலை விழா 2006 -ஒரு கண்ணோட்டம்....................... 2
ஒன்றுகூடல் இரத்து ............................................... 3
18வது இராப்போசன விருந்து 2006............................ 3
தொண்டர்களின் நிதி அன்பளிப்பு .............................. 4
புதிய ஆயுட்கால அங்கத்தவர் ........................................ 4
புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள்.............................. 4
தற்போதைய நிர்வாக சபை ......................................... 4
திருத்தங்கள் ............................................................. 5
அங்கத்தவர்களின்அபிப்பிராயம்... ............……………. 4
ஆசிரியர் தலையங்கம் .............................................. 5
ஆயுட் கால அங்கத்துவ விண்ணப்படிவம்........................ 6
கிரிக்கட் குழுவினர் படம்…………………………… 7


### பொதுக்கூட்டம் 2006
### நவம்பர் 18, 2006 – மாலை 5:30 மணி

இவ்வாண்டுப் பொதுக்கூட்டம் North York, Bartley Drive 174ம் இலக்கத்தில் அமைந்துள்ள Celebrations Banquet மண்டபத்தில் நடைபெறும். கூட்டத்திற் பங்கேற்க விரும்பும் ஹாட்லிக் கல்லூரிப் பழைய மாணவர்களும், ஆசிரியர்களும் பழைய மாணவர்களின் கணவன்/மனைவிமாரும் பிள்ளைகளும் சங்கத்தின் அங்கத்தினராக இருப்பது அவசியம். சாதாரண சந்தா $10. ஆயுட் சந்தா $100.

சங்கத்தின் 2007ம் ஆண்டு நிர்வாகசபையின் பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பின் நியமனப் பத்திரத்தை ஒழுங்காக நிரப்பி சங்கத்தின் செயலாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்திற்கூட நியமனங்களைச் சமர்ப்பிக்க முடியுமாக இருந்தாலும் நியமனம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியம்.

பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் அங்கத்தவர்கள் ஹாட்லியின் முன்னேற்றங்களில் ஈடுபடுவதற்கு தமது நேரத்தை ஒதுக்க ஆயத்தமுள்ளவராக இருக்க வேண்டும். பதவிகட்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் அதிகப்படியான வாக்குகளைப் பெறும் வேட்பாளரே தெரிவு செய்யப்படுவார். எவர் தெரிவு செய்யப் பெற்றாலும் போட்டியிட்டவர்கள் அவருடன் சேர்ந்து எமது சங்கத்தினதும் ஹாட்லிக் கல்லூரியினதும் முன்னேற்றத் துக்காகப் பாடுபட முன்னிற்பது எமது கடமையென்பதை மனதில் நிலை நிறுத்த வேண்டும். அதேபோல, சங்கத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமான முடிவுகள் ஜனநாயக விதிமுறைகளுக்கமையப் பெரும்பான்மை யினரால் எடுக்கப்படும் என்பதனையும் அம் முடிவு களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்பதனையும் தனது விருப்பத்துக் கெதிரானதாகப் பெரும்பான்மை யினரின் முடிவு அமைந்தால் அந்த ஒரேகாரணத்துக்காக அச் செயற் திட்டத்தையோ, ஏனைய செயற் திட்டங்களையோ பகிஷ்காரம் செய்யக்கூடாதென்றும் அறிந்து கொள்வது அவசியம்.

பிரேரணைகள் எழுத்து வடிவில் 14 நாட்களுக்கு முன்னராகச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

கூட்டம் தமிழில் நடாத்தப்படும்.

## கிரிக்கட்- ஹாட்லி யாழ் இந்துவை வென்றது

யாழ் இந்துக் கல்லூரியுடனான பேராசிரியர் துரைராஜா நினைவுக் கிண்ண வருடாந்தக் கிரிக்கட் போட்டி இம்முறையும் வழமை போல Sunny Brook பூங்காவில் கனடா தினத்துக்குரிய விடுமுறை நாளான ஜூலை 3ம் திகதி திங்களன்று நடைபெற்றது. முதலிற் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து 37 ஓவர்களிற் சகல விக்கட்டுகளையும் இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இந்துக்கல்லூரி சார்பில் லோகன் 29 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். ஹாட்லி சார்பில் வ.ஜெயராமன் 29 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கட்டுகளையும் து.பவளராஜா 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கட்டுகளையும் கைப்பற்றினர். பந்து தடுப்பில் ந. சிவபாலன் நான்கு catch களைக் பிடித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய ஹாட்லி 24.3 ஓவர்களில் 4 விக்கட்டுகள் இழப்பிற்கு 107 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் களநிலை காரணமாக விளையாட்டு முடிவுக்கு வந்தது. ஹாட்லி சார்பில் வ. ஜெயராமன் 38 ஓட்டங்களையும் து. பவளராஜ் 22 உம் வி. மனோகரன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந் நிலையில் ஓட்ட விகிதாசாரப்படி (D/L முறை) ஹாட்லி 39 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாகப் பிரகடனப் படுத்தப் பட்டது.

இப் போட்டி நிகழ்வில் வைத்தியர் ஜோன் பிகராடோ ஹாட்லி சார்பிற் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். தலைவர் கோ. இராஜரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பின்வருவோர் சிறப்புப் பரிசில்களைப் பெற்றனர்:

1. சிறந்த பந்து வீச்சாளர்: குமுதன் – யாழ் இந்து
2. சிறந்த துடுப்பாட்ட வீரர்: லோகன் – யாழ் இந்து
3. சிறந்த பந்து தடுப்பாளர்- ந. சிவபாலன் ஹாட்லி
4. சிறந்த சகல துறை வீரர்: து. பவளராஜா
5. ஆட்ட நாயகன்: வ.ஜெயராமன்

ஹாட்லிக் கல்லூரி சார்பிற் பிரதம விருந்தினரும் தலைவரும் செயலாளரும் பரிசில்கள் வழங்கியதுடன் நிகழ்வு நிறைவெய்தியது.

## கலை விழா 2006- ஒரு கண்ணோட்டம்

தாயகத்தில் அமைந்திருக்கும் ஹாட்லிக் கல்லூரியின் அபிவிருத்திக்காகக் கனடாவில் ஆண்டு தோறும் நடாத்தப் பட்டு வரும் கலை விழா இம்முறை தனித்துவமாக விளங்கியது. ஜூன் 10 சனிக்கிழமை மிஸ்ஸீஸ்ஸாகாவின் Glen Forest பாடசாலை அரங்கம் ஓர் இனிய மாலைப் பொழுதுக்காகத் தயாராக இருந்தது.

380க்கு மேல் நுழைவுச்சீட்டுக்கள் விற்பனையாகி இருந்தாலும், பல கோயில்களில் நடந்தேறிய தேர்த் திருவிழாக்களுக்கும் உறவினர்களின் திருமணங்களுக்கும் உறுப்பினர்கள் சென்றுவிட்டதால் பார்வையாளர்கள் வருகை குறைவாக இருந்தாலும் வந்தவர்கள் எல்லோரும் கலை ரசனை நிறையவே கொண்டவர்கள் என்பது விழா நடந்துகொண்டிருந்த போது தெளிவாகத் தெரிந்தது.

ஹாட்லிக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத் தலைவர், செயலாளர் மட்டுமன்றி பிரதம விருந்தினர் திரு. சிவசோதி அவர்களும் தமிழ்க் கலாசார மரபுக்கமைய, பட்டு வேஷ்டி, சால்வை அணிந்து மேடையிற் தோன்றியதுமே ஒரு புது யுகம் ஆரம்பமாகிவிட்டதென்ற நம்பிக்கை அனைவர் நெஞ்சிலும் துளிர்த்தது.

தமிழ்த் தாய் வாழ்த்து, கர்நாடக சங்கீதம், புஷ்பாஞ்சலி நடனம் என்பவற்றைத் தொடர்ந்து திரு விஜே குலதுங்கம் அவர்கள் நிகழ்த்திய மாயாஜாலம் பார்வையாளர்களை, மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. ரசிகர்கள் மத்தியிலிருந்த சிறுவர்களையும் மேடைக்கு அழைத்துப் பங்குபற்ற வைத்ததுடன், முயன்றால் எல்லோரும் இந்த வித்தையைச் செய்யலாம் என்று சொன்னது அவரது தனிச் சிறப்பு.

அடுத்து ஒரு பெண்பிள்ளை பரத நாட்டியம் ஆட மேடையேறியபோது சின்னப் பெண்ணாக இருக்கிறாளே என்றுதான் பலர் நினைத்திருக்கும் போது, செல்வி சாளா நிருபன் தனது அபிநயத்தாலும் பாவனையாலும் திருவள்ளுவராக அரங்கில் வாழ்ந்து காட்டியபோதும், எட்டுத்திக்கும் இடியிடிக்கக் கொட்டிய மழையில் மஹாகவி பாரதியாக நனைந்த போதும் கலைவாணி களி நடம் புரிந்தாள். தமிழினத்தின் சர்வதேசக் கலைத்தூதுவராகச் செல்வி சாளா நிரூபன் ஏற்றம் பெற வாழ்த்துகிறோம்.

பொன். அருந்தவநாதனின் குழுவினர் வழங்கிய வில்லுப் பாட்டு இரசிக்கக் கூடியதாக இருந்தாலும் நேரப் பற்றாக்குறை நிகழ்ச்சியில் இருவிதமாகவும் செல்வாக்குச் செலுத்தியதை அவதானிக்க முடிந்தது.

அன்றைய கலை விழாவுக்கு முத்தாரம் போன்று அமைந்த நிகழ்ச்சிகள் இரண்டு. அவற்றுள் ஒன்று – “தூரம் அதிகமில்லை” என்ற தலைப்பில் திரையில் விரியும் மௌனப் படங்களுடன் கனல் பறக்கும் தமிழ்க் கவிதை நடையிற் செல்வி சுஜனி கிருஷ்ணலிங்கம் வழங்கிய நிகழ்ச்சி நம் இதய நரம்புகளைச் சிலிர்த்தெழச் செய்தது. மிஸிஸ்ஸாகா நகரை விட்டு அப்படியே ரசிகர்களை ஈழமண்ணிற் கொண்டு போய் நிறுத்தி, மறக்க முடியாத உண்மைகளை நினைவூட்டியது. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கவும் வேண்டுமா?

Father James All Star Show அன்றைய கலை விழாவின் மிகச்சிறந்த நிகழ்ச்சிகளில் ஒன்று. Elsworth James என்ற இந்தக் கரீபியன் பாடகர், இரசிகர்களையும் இணைத்துக் கொண்டு பாடிய ‘Buffalo Soldier’ அரங்கத்தை ஆனந்தக் கூத்தாட வைத்தது. ‘Toronto is very nice, but I am going to Paradise’ என்ற பாடல் செவிக்கும் சிந்தனைக்கும் பெரு விருந்து; அரு மருந்து. அவருக்கும் ஒரு முத்தாரம் சூட்டலாம்.

கடந்த அரை நூற்றாண்டு காலத் தமிழர் வாழ்வில், அறிந்தோ அறியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ சினிமா உலகத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. சினிமாப் பாடல்கள் இல்லாமல் எந்த நிகழ்வும் சோபிக்காது. கலை விழாவின் இறுதி நிகழ்வாக, -கல்யாணச் சபையிற் கடைசியிற் பரிமாறப்படும் பாயாசம் போல- Mega Tuners வழங்கிய திரையிசைப் பாடல்கள் அமைந்திருந்தன. அவரவர் ரசனைக்கேற்ப ரசிக்கலாம் (சர்க்கரை வியாதியிருந்தாற் தள்ளியும் வைக்கலாம்) பாயாசத்தில் மிதக்கும் முந்திரிகை வற்றல் போல Lil Lankan Superstarz என்னும் குழுவிலிருந்து நான்கு பையன்களின் சாகச நடனங்கள் சற்றே மேடைக்

கூச்சமிருப்பது போலத் தோற்றினாலும் நிறைய ஒத்திகை பார்த்திருப்பது புரிந்தது. முன்னேற இடமுண்டு.

எப்போதும் சிரித்த முகத்துடன் மதுரன் சுந்தரமூர்த்தி; தமிழை இவ்வளவு இங்கிதமாகப் பேச முடியுமா என வியக்க வைக்கும் செல்வி சுஜனி கிருஷ்ணலிங்கம் – இருவரும் அன்றைய நட்சத்திரங்கள். அந்த இளம் அறிவிப்பாளர்களுக்கு எமது நல் வாழ்த்துகள்.

கலை விழாவின் போது தலைவர் கோ. இராஜரத்தினமும், பிரதம விருந்தினர் சிவசோதியும் தமிழில் உரை நிகழ்த்தினார்கள்.

தலைவர் தனது உரையில், இளம் சமுதாயத்தினர் இம்முறை சங்கத்தை நடாத்த விரும்பித் தன்னையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டதாகt தெரிவித்தார்.

அவர் மேலும் பேசும் போது, எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் பலர் என்ன நடந்தாலும் தொடர்ந்து வருகை தந்து வைபவங்களிற் கலந்து சிறப்பிக்கும் போது, ஒரு சிலர் தாங்கள் நிர்வாக சபையில் முக்கிய பதவிகளை வகிக்கும் போது ஏனையோரின் சேவைகளைப் பெற்றுக் கொண்டு தங்களுக்குரிய கௌரவங்களையும் பெற்றுக் கொண்டு தங்கள் பதவிக் காலம் முடிந்ததும் சங்கத்தைப் புறக்கணித்துக் கொண்டு விலகிக் கொண்டு போய்விட்டதைக் கவலையுடன் தெரிவித்தார்.

பிரதம விருந்தினர் திரு. சிவா சி. சோதி உரை நிகழ்த்தும்போது புது நிர்வாக சபையினர் நிகழ்ச்சிகளை ஒழுங்காக நடத்திவருவதைக் கண்டு தான் மகிழ்ச்சி யடைவதாகவும், அவர்களின் அணுகுமுறை வித்தியசமானதாக இருக்கையில் விளைவு அதிகமானதாக இருப்பது வெளிப்படையாக தெரிவதாகவும் தெரிவித்தார்.

இளைஞர்களின் நடவடிக்கைகள் எப்போதும் சக்தி வாய்ந்ததாகத்தான் இருக்குமென்றும் பெரியவர்கள் அவர்-களுக்கு முன்வந்து வழி காட்டி இயலுமான உதவிகளைச் செய்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பட்டு வேட்டி சால்வை அணிந்து வந்த திரு சோதி முதலில் தனக்கு அது ஒரு புதினமான விஷயமாக இருந்-தாலும், சொல்லப்பட்ட விளக்கங்கள் நல்ல தெளிவைத் தந்தன என்றும் எந்த மங்களமான வைபவங்கள் என்றா-லென்ன, கோவிலுக்கு என்றாலென்ன, எமது பெண்கள் சேலையணிந்து பொட்டுப் போட்டுத் போக முடியுமாயின் எம்மால் மாத்திரம் ஏன் முடியாது என்று கேள்வி எழுப்பினார். அத்துடன், இது தமிழர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி. எமது மொழி, கலை, கலாச்சாரம் பாரம் பரியங்களை நாம் பேணிப் பாதுகாக்க இயலுமானவரை முயலவேண்டும், ஏனென்றால் அவை தான், எமது அடையாளச் சின்னங்கள். அதேபோல, தமிழிலே எமது செய்தித் தாளை இம்முறை வெளியிட்டதும் ஒரு பாராட்டப்பட வேண்டிய விஷயமாகும் என்றார்.

## ஹாட்லி ஒன்றுகூடல் இரத்து

தமிழர் தாகயத்தில் செஞ்சோலை, வாகரை, மூதூர், மற்றும் அல்லைப்பிட்டியில் இலங்கை அரச படைகளினால் நடாத்தப்பட்ட வான்படை மற்றும் வெறியாட்டங்களில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்ததுமான கொடூரங்களுக்குத் துக்கம் அநுஷ்டிக்க வேண்டி ஆகஸ்ட் 19ம் திகதி நடாத்தப்பட இருந்த ஒன்று கூடல் நிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்பட்டதாயினும், அறிவிக்கப்பட்டபடி ஹாட்லிப் பழைய மாணவர் Downsview Dells பூங்காவில் மதியம் கூடி செஞ்சோலை/வாகரை நிவாரண நிதியத்துக்கு நிதி வழங்கினர். இதுவரை நிதி வழங்கியவர் விவரம் கீழ் வருமாறு:

| | | |
|---|---|---|
| V | Suntharamoorthy | $200 |
| V | Vijenthira | $200 |
| M | Wijendra | $150 |
| M | Atputhanathan | $100 |
| K | Jeyakanthan | $100 |
| V | Jeyaraman | $100 |
| G | Sebas | $100 |
| K | Senthilvelan | $100 |
| S | Sivapalaratnam | $100 |
| S | Sivarajah | $100 |
| P | Wilson | $100 |
| W | Manoharan | $100 |
| K | Anandakrishan | $50 |
| G | Maheswaran | $50 |
| C | Manoharan | $50 |
| V | Mohan | $50 |
| R | Brabaharan | $50 |
| K | Rajaratnam | $50 |
| P | Ramesh | $50 |
| R | Rudran | $50 |
| S | Sujanthan | $50 |
| T | Thiruchelvam | $50 |
| M | Thiyahendran | $50 |
| S | Paraparan | $30 |
| R | Radhakrishnan | $25 |
| Raje | Rajaratnam | $25 |
| N | Sivapalan | $25 |
| Siva | Sothy | $25 |
| | Total | $2,080 |

இராப் போசனத்தின் போது நிதியுதவி செய்ய வாய்ப்புக் கொடுக்கப்படும்.

## 18வது ஹாட்லி இராப்போசன விருந்து 2006
## நவம்பர் 18, 2006 – மாலை 6:00 மணி

இவ்வாண்டு இராப்போசன விருந்து நவம்பர் மாதம் 18ம் திகதி மாலை 7:30 மணிக்கு North York, Bartley Drive 174 ம் இலக்கத்தில் அமைந்துள்ள Celebrations Banquet மண்டபத்தில் நடைபெறும்.

சங்க முயற்சிகளுக்கு நிதியுதவி செய்வதில் முன்னின்று எங்களுக்கு ஊக்கமளிக்கும் வைத்தியர் திருமதி ஜோதிமலர் முகுந்தனும் அவரது கணவரும், எமது சிறப்பு விருந்தினர் அழைப்பை ஏற்று வருகை தரவுள்ளனர்.

மாலை 6:00-7:30 மணி நேரத்தில் பெரியவர்கள் குசலம் விசாரித்துப் பேசிக் கொண்டிருக்கும் போது 6:00 **மணிக்குச் சிறுவர் சிறுமியர்களை மகிழ்விப்பதற்காக இம்முறை மாயாஜால வித்தை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.**

பேச்சுக்களுக்கு நடுவில் நானாவித ஆடல் பாடல் கலந்த கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. இராப்போசனம் 8:30 மணியளவில் வழங்கப்படும்; நிகழ்வு இரவு 10:30 யளவில் முடிவடையும்.

- நுழைவுச் சீட்டுகள்: பெரியோர் $20
- இளையோர் (Teens) $10
- 12 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் இலவசம்

நுழைவுச் சீட்டுகளை அமைப்பாளர்கள் கு.மனோகரன் (416)299-5143 mcurunathan@symcor.com, மு.விஜேந்திரா (647)891-7253 routersale@gmail.com, மற்றும் செயலாளர் வீ.விஜேந்திரா (416)877-8409 vij@rogers.com ஆகியோரிடம் பெற்றுக் கொள்ளலாம். இம்முறை நுழைவுச் சீட்டுக்கள் 11ம் திகதிக்கு முன்னர் விற்பனையாகி விட வேண்டுமென்ற குறிக்கோளுடன் நிகழ்வு அமைப்பாளர்கள் விநியோகத்தை மேற்கொண்டிருப்பதனால் உங்கள் நுழைவுச் சீட்டுகளை உடனேயே பதிவு செய்து கொள்ளுங்கள். நுழைவுச் சீட்டுக் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிக்குப் பெறுமதி மிக்க பரிசு காத்திருக்கிறது.

இம்முறை மண்டபவாசலில் நுழைவுச் சீட்டுக்கள் விற்பதற்குரிய சாத்தியம் மிகவும் அரிது. உங்கள் நுழைவுச்சீட்டுக்களை வாசலில் வைத்திருப்பதற்கு யாருடனாவது தொலை பேசியிலோ, email மூலமாகவோ ஒழுங்கு செய்யலாம்; ஆனால் அப்படி ஒழுங்கு செய்துவிட்டபின்னர் நீங்கள் வருகை தராது போனாலும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

Driving directions:
Eastward on Eglinton E. - Drive one km past DVP, turn right on Bermondsey, Bartley is the first left turn (Signal lighted).
Westward on Eglinton E. – Turn left on O'Conner, cross Victoria Park, Bartley is in 10 yards at right)

## தொண்டர்களின் நிதி அன்பளிப்பு

ஹாட்லிக் கல்லூரியின் மீள் கட்டட நிதிக்காக கீழ்க்காணும் பதினாறு ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் ஒன்று சேர்ந்து தொண்டாற்றி $1500 (ஆயிரத்தி ஐநூறு டாலர்கள்) அன்பளிப்புச் செய்துள்ளனர்:

| | |
|---|---|
| சீ.சிவபாலரட்ணம் | பொ.ரமேஷ்வரன் |
| வி.மனோகரன் | சு.சுஜந்தன் |
| சு.சிவராஜா | க.மகேஸ்வரன் |
| வீ.விஜேந்திரா | வி.மோகன் |
| கு.மனோகரன் | கி.ஆனந்தக்கிருஷ்ணன் |
| மு.விஜேந்திரா | தி.திருச்செல்வம் |
| சி.உருத்திரன் | ஜோ.செபஸ் |
| ச.சத்தியசீலன் | சு.ரமேஷ் |

## புதிய ஆயுட் கால அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| 162 Maheswaran Ponniah | 416-689-9841 |
| 163 Vel Subramaniam | 647-855-8865 |
| 164 Philips Joseph Ariyanayagam | 416-724-2236 |
| 165 Ganendran Narasingavel | 416-827-2362 |
| 166 Sujanthan Subramaniam | 416-854-5413 |
| 167 Thavendran Kathirgamar | 416-293-9990 |
| 168 B Nandakumar | 416-739-9523 |
| 169 Thavarajah Ratnavadivel | 905-495-2523 |
| 170 Rajaram Kandasamy | 609-452-1346 |
| 171 Ramesh Thurarajah | 416-917-9757 |
| 172 Ajanthan Subramaniam | (416)876-1276 |
| 173 Aravinthan Thiyagarajah | 416-492-7474 |
| 174 Atchuthanathan Kathirithamby | 416-287-3956 |
| 175 S. Sarangan | |
| 176 Sugunthan Sivagnanasundaram | 905-970 1170 |
| 177 S.Umapathy | |
| 178 K. Utayaraj | (416)835-5692 |

## புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள்

காலம் சென்ற திரு. கருணாநிதியின் இடத்துக்கு திரு. சுப்பிரமணியம் சுஜந்தனும் மூன்று முறை கூட்டங்களுக்கு வருகை தராத காரணத்தினால் நிர்வாக சபையிலிருந்து விலக்கப்பட்ட திரு மு. தியாகேந்திரனின் இடத்துக்குத் திரு. சுப்பிரமணியம் அஜந்தனும் சபையினால் ஏகமனதாக நியமனம் செய்யப்பட்டனர்.

S.Sujanthan (416)829-5042 sujanthans@yahoo.ca
S.Ajanthan (416)876-1276 ajanthan79@yahoo.com

## தற்போதுள்ள நிர்வாக சபையினர்

| | |
|---|---|
| **President:** | |
| K Rajaratnam | (416)431-0987 |
| **Vice Presidents**: | |
| S. Sivarajah | (647)297-7903 |
| W. Manoharan | (416)899 9785 |
| **Secretary:** | |
| V. Vijenthira | (416)877-8409 |
| **Treasurer:** | |
| C. Manoharan | (416)299-5143 |
| **Asst. Secretary:** | |
| M. Wijendra | (647)891-7253 |
| **Asst. Treasurer:** | |
| S. Rudran | 647)4043398 |
| **Editor:** | |
| S. Sathiyaseelan | (647)406-5392 |
| **Members:** | |
| N. Sivapalan | (416)746-0307 |
| S. Sivapalaratnam | (416)565-2814 |
| P. Rameshwaran | (647)393-2483 |
| R. Thanaraj | (416)759-2398 |
| S. Ajanthan | (416)876-1276 |
| G. Maheswaran | (416)317-0654 |
| V. Mohan | (416)219-8185 |
| K.Ananthakrishnan | (416)889-2082 |
| M.Thayaparan | (905)454-8568 |
| S.Sujanthan | (416)829-5042 |
| **Auditors:** | |
| T. Thiruchelvam | (905)554-2000 |
| Mr.V. Jeyaraman | (416)884-4410 |

### திருத்தங்கள்

எமது முந்தைய இதழில் வெளிவந்த விஷயங்கள் சிலவற்றில் இருந்த சில தவறுகளைச் சுட்டிக்காட்டிய அங்கத்தவர்கள் தந்த திருத்தங்களைச் சரியாக ஆராய்ந்தபின் கீழே தருகிறோம்.

புதிய ஆயுள் அங்கத்தவர் விவேகானந்தன் ஞானச்சந்திரன் (அங்கத்தவர் இலக்கம் 159) அவர்களின் தொலைபேசி இலக்கம் தவறுதலாக அச்சடிக்கப்பட்டுவிட்டது. சரியான இலக்கம் **416-992-8500** ஆகும்.

முன்னர் அச்சடிக்கப்பட்ட **905-672-1792** எனும் இலக்கம் எம் ஆரம்ப கால அங்கத்தவர் K. Gnanachandran (அங்கத்தவர் இலக்கம் 15) அவர்களுடையது.

### அங்கத்தவர்களின் அபிப்பிராயம்

- News letter is pretty good. I was able to grasp all info with a quick review. -V. Navakumar
- The new newsletter is well written. When I took over as president we had our first news letter in Tamil and English. -Dr. Shan A Shanmugavadivel
- I suppose that the newsletter being in Tamil is a change. Of course, people have differing opinions regarding the necessity for promoting our own language, culture, and dress habits. -V.Shan
- I highly comment this year's committee for being the highly motivated and action oriented committee. I am very much impressed. –Raj Mathavan
- I quite agree with you that to the extent possible we should use our own language. -K.Jeganathan
- Kalai Vilza Souvenir front page looks excellent!! Symptom of vidiyal!!!- Ramesh Ponniah
- கலைவிழா கொஞ்சம் நீண்டு போனாலும் நிகழ்ச்சிகள் தரமானதாகவும் இரசிக்கத் தக்கதாகவும் இருந்தன. -வி. சுந்தரமூர்த்தி-
- I hope our news letter will not turn into a propaganda material for the civil unrest in our country of birth. -K. Gnanachandran-

அங்கத்தவர்களின் அபிப்பிராயங்களையும் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் நாங்கள் மிகவும் வரவேற்கிறோம். அவற்றைத் தமிழிலோ ஆங்கிலத்திலோ எழுதி எமது செயலாளரின் கவனத்துக்கு vij@rogers.com என்ற emailக்கு அல்லது 416-696-6894 என்ற fax எண்ணுக்கு அனுப்பி வையுங்கள்.

### ஆசிரியர் தலையங்கம்

மாதா பிதா குரு தெய்வம் என்பது நமது சான்றோர்கள் காட்டிய நல்வாழ்வுக்கான படிமுறைகள். ஒன்றின் ஊடாக மற்றது, தனியான ஒரு குருவிடம் வித்தை பயில்கின்ற குருகுலவாசம். அதன் பின் வந்த திண்ணைப் பள்ளி - இவையெல்லாம் அருகி விட்ட நிலையில், ஒவ்வொருவருக்கும் அவரைச் செழுமைப்படுத்திய பாடசாலை தான் அவரவர் குரு. இந்த வகையில், ஹாட்லியின் மைந்தர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் அனைவரும், நாம் வணங்கும் தெய்வத்துக்கு அடுத்த நிலையில் நமது ஹாட்லிக் கல்லூரியை மதித்துப் போற்றவேண்டும்.

தெய்வத்துக்கே சோதனை வந்ததாக இதிகாசங்கள் சொல்கின்றன. ஹாட்லீயும் சோதனை மிக்க ஒரு கால கட்டத்தை எதிர் கொள்கின்றது. சாதனைகளில் மட்டுமன்றி, சோதனைகளிலும் பங்கெடுப்பதுதான் உறவுக்குப் பெருமை.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் அனைவருமே உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டுதான் ஹாட்லிக் கல்லூரி வளாகத்துட் கால் பதிக்கின்ற அவல நிலைமை. கற்கும் மாணவர்களும் கற்பிக்கின்ற ஆசிரியரும் எந்நேரம் எது நடக்குமோ என்ற அச்சத்துடன் நடமாடுகின்றார்கள். கணனிகள், விஞ்ஞான உபகரணங்கள், விளையாட்டுச் சாதனங்கள், புத்தகங்கள், தளபாடங்கள் என்று வாரி வழங்க நான்கு திசைகளிலும் ஹாட்லியின் மைந்தர்கள் ஆவலுடன் முயற்சித்தாலும் எதையும் நம்பித் தொடங்க முடியாத நிச்சயமற்ற சூழ் நிலை.

பூகோளக் கிராமம் (Global village) என்று உலகம் சுருங்கி, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (ICT) விரிந்துவிட்ட நிலையில் அங்கு நடக்கும் அவலங்கள் இங்கு தெரியாமலில்லை. ஆனால் எதுவுமே உறைக்க வேண்டிய இடத்தில் இன்னமும் உறைக்கவில்லை; உதைக்க வேண்டிய இடத்தில் இன்னமும் உதைக்கவில்லை. நமது புத்தி ஜீவிகள் நடைமுறைச் சாத்தியமான, வினைத்திறன் (efficient), விளைதிறன் (effective) மிக்க வழிமுறைகளைச் சிந்தித்துச் செயலுருவம் கொடுக்க வேண்டிய தருணமிது.

இந்த விடயத்தில் ஹாட்லியின் மைந்தர்களாகிய நாம் அனைவருமே செய்யக்கூடிய காரியம் உண்டு. காரியம் என்று சொல்வதை விட, கால எல்லை நிர்ணயித்து, எய்த வேண்டிய இலட்சியம் என்று இதனை எடுத்துக் கொள்வோம். நாம் ஒவ்வொருவரும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் இன்றைய அவல நிலையை விளக்கமாக-தமிழராகவோ இலங்கையராகவோ அல்லாத- ஒருவருக்காவது சொல்ல வேண்டும்.இதற்காக ஒரு 15 நிமிஷம் appointment பெற்றுக் கொண்டாலும் நல்லது. ஒருவர் நான்கு பேருக்குச் சொல்ல, 4, 16, 64 என்று சங்கதி பரவும். கலை விழா, கிரிக்கட், ஒன்று கூடல், ஹாட்லி இராப்போசன விருந்து போன்றனவற்றில் எவ்வளவு காட்டமாக நாம் கத்தினாலும் அது எம்மவர் வட்டத்துக்குள்ளேயே சுற்றி வந்துவிடுகிறது. அயல் வீட்டுக்கு நம் குரல் எட்டாதவரை அயலவர் நல்லவரா வல்லவரா அல்லவரா என்று எப்படித் தீர்மானிப்பது?

“மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை” -பாரதி-

உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆசிரியர்: ச. சத்தியசீலன்

# HARTLEY COLLEGE

## Past Pupils Association – Canada/USA

(Ontario Corporation Number 906192)

Established 1989

## LIFE MEMBERSHIP APPLICATION FORM

Membership No. ☐

Please check one ☐ Mr. ☐ Mrs. ☐ Ms. ☐ Miss.

Member name: ____________________________________________

Other names: ____________________________________________

Address: ____________________________________________

____________________________________________

Phone No.: Home: ____________________ Work:__________________

Email: Main: ______________________ Alt.: ________________

Years in Hartley College: ___________________________________

Grades in Hartley College: __________________________________

House: _______________________________

Enrolled by: _______________________________

As a past pupil/teacher of Hartley College, Point Pedro, I hereby apply for admission as a life member of Hartley College Past Pupils Association, Canada & USA, I am forwarding a check/cash for the life membership fee of $100.

________________________ ____________________

Signature Date

Note:

Please draw the check in favor of Hartley College Past Pupil Association and mail application form with check to the Treasurer:

Mr. C. Manoharan 48 Bethany Leigh Drive, Scarborough, ON M1V 2N7

Hartley College Past Pupils' Association Canada USA Cricket Team 2006



Back row: V. Jeyaraman, V. Mohan, W. Manoharan, N. Prakash, B. Arasapalan, K. Sahathevan, N. Sivapalan
Front row: N. Mayilvahanam, S. Sujanthan, T. Pavalaraj, Raje Thanaraj, Premkumar


RouterSale.com
Ultimate Bargain Store for Factory Refurbished:
Laptops,
Computers,
Cisco® Routers &
Sun® Servers
100% Satisfaction
RISK FREE
Guaranteed
உங்கள் Laptop & Computer தேவைகளுக்கு அழையுங்கள்: Wijen (647) 891 7253


www.Home-Mortgage-Toronto.com
Bad Credit?
Self-Employed?
No proof of Income?
Renewing? Refinancing?
உங்கள் Mortgage
கவலைகளை நிவர்த்தி
செய்யத் தயங்காது
அழையுங்கள்:
Trillium Mortgage
Amy Wijendra
mortgagedeal@gmail.com
(416) 738 8800
Mortgages
Yes!